<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்</u>

<u>நாள். 01.03.2024</u>
<u>O.S. 133/2019</u>
<u>வா.சா.1 ராஜ துரை</u>
<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவண எண் 1664/1965 என் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது பி.சா. ஆ 2 _அதன் படி என் தகப்பனார் 27 1/2 சென்ட் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். பி.சா.ஆ 2 கிரைய ஆவணத்தில் புல எண் 1303 ஏ யில் 55 சென்ட்ல் கிழகது பக்கம் பாதி 27 1/2 சென்ட் என் அப்பா கிரையம் வாங்கியதாக குறிப்பிட்ப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ 2ல் கிழக்கு எல்லை நாராயண பெருமாள் நாடார் நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது தெற்கு சானல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கு பொன்னார் நாடார் நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு சுப்பையா நாடார் நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

என் அப்பாவிற்கு கிரையம் கொடுப்பதற்கு முன் கைலாச நாடார் ஒத்திக்கு கொடுத்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. ஒத்திக்கு விலைப் பத்திரமாக கொடுக்கப்பட்டது என்றால் அதனை செல் அடித்துவிட்டார்கள். எங்கள் சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள 27 1/2 சென்ட்டில் எங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. பாக பத்திரம் கோவில் இருக்கும் இடத்தை அபகரிக்க வேண்டி நாங்கள் ஏற்படுத்தி கொண்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ 2 ல் மேற்கு பக்கம் சொத்து பொன்னார் நாடார் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எங்கள் தாத்தா தான் பொன்னார் நாடார்.

நான் பொன்னார் நாடார் என் தாத்தா என இந்த வழக்கிற்காக

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கு பக்கம் உள்ள 27 1/2 சென்ட் நிலத்தில் என் உரிமையை காட்ட போலி பாகப் பிரிவினை ஆவணத்தை தவிர வேறு எந்த ஆவணமும் இல்லை என்றால் பத்திரம் எதுவும் இல்லை. அந்த இடத்தில் கோவில் கட்டியதற்கு எந்த ஆவணமும் சமர்ப்பிக்க வில்லை என்றால் சரியல்ல. சமர்ப்பித்துள்ளேன். கோவிலை நிர்வாகம் செய்தததாக காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் குடும்ப கோவில் என்பதால் நோட்டீஸ் மட்டும் தாக்கல் செய்துள்ளேன்.

எங்கள் குடும்ப உறுப்பினர் மொத்தம் 8 நபர்கள். என் தாத்தாவிற்கு என் அப்பா மட்டும வாரிசு. என் அப்பா மட்டும் வாரிசு எனக் காட்ட வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்ய முடியும். அந்த கோவில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் பிரதிவாதிகள் தான் கோவிலை கட்டி நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. அந்த கட்டிடத்திற்கு வரி பிரதிவாதிகள் செலுத்தி வருகிறார்கள் என்றால் கோவிலுக்கு வரி கிடையாது.

கோவிலில் பூசை, கொடைவிழா கும்பாபிசேகம் அனைத்தும பிரதிவாதிகள் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. கோவிலில் கல்வெட்டு இருப்பதாக நான் சொல்வது இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. 1991ம் ஆண்டு 6ம் மாதம் வைக்கப்பட்டது. நீதிமன்ற ஆணையர் வந்த் சமயம் அந்த கல்வெட்டை அவரிடம் காட்டினேனா என்றால் இல்லை. அதனை பெயர்த்துவிட்டார்கள். நான் இந்த வழக்கிற்காக அந்த கல்வெட்டை அகற்றிவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என் சகோதரத் காவல் துஜறயில்வேலை பார்க்கிறார் என்றால்

இல்லை. என் தம்பி மகன் வேலை பார்க்கிறார். எனக்கு எதிராக காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றால் இல்லை. என் தம்பி மகன் காவல்துறையில் பணி புரிவதால் அதை பயன்படுத்தி பிரதிவாதிகள் மீது பொய் புகார் பெற்று தவறாக முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ 1 பாக பத்திரத்தில் உள்ள அளவுகளின் படி வருவாய் துறையில் உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது கோவில் பிரதிவாதிகள் கட்டுப்பாட்டில் உள்ளது என்றாலும் எங்களுக்கு கோவிலில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. கோவில் நிர்வாகத்தில் நாங்கள் எந்த காலக்கட்டத்திலும் இருநதது இல்லை என்றாலும பூசை மற்றும் விஷேசங்கள் நடத்தியது இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு பரிகாரங்கள் எனக்கு கிடைக்க கூடியது என்றால் சரியல்ல.